# யாழ் அகதிகளுக்கான 'ஐ. நா. உயர் ஸ்தானிகராலயம் புனர்வாழ்வு நடவடிக்கைகளை இடை நிறுத்தியுள்ளது

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4-50

# முரசொலி

தொகை 08 ஒலி 47 பிரமோதூத மார்கழி 29 (13-01-1991) ஞாயிறு

யாழ் நகரில் இயங்கி வரும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் யாழ் மாவட்டத்தில் மேற்கொண்டு வந்த புனர்வாழ்வு நடவடிக்கைகளை இடைநிறுத்தியுள்ளது, கடந்த ஜூன் மாதம் யுத்தம் ஆரம்பித்ததையடுத்து இங்குமேற்கொள்ளப்பட்டு வந்த வீடமைப்பு, மீன்பிடி, முறைசாராக்கல்வி போன்ற துறைகளுக்கு வழங்கி வந்த சகல உதவிகளையும் இந்த ஸ்தாபனம் தற்காலிகமாக நிறுத்தியுள்ளது. முன்னர் இடம் பெயர்ந்து இந்தியா சென்று திரும்பிய அகதிகளுக்காக இந்த ஸ்தாபனத்தால் ஆரம்பிக்கப்பட்ட 1350 வீடுகளை அமைக்கும் திட்டத்தில் 623 வீடுகள் மட்டுமே பூர்த்தியடைந்துள்ளன. நல்லூர், பருத்தித்துறை, சண்டிலிப்பாய், கோப்பாய், மருதங்கேணி ஆகிய இடங்களில் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான கட்டிடப்பொருட்கள் வழங்கப்பட்டு தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் கண்காணிப்பில் இவ்வீடுகள் அமைக்கும் பணி இடம்பெற்று வந்ததும் குறிப்பிடத்தக்கது (66)

# கிளிநொச்சி நகரில் விமானத் தாக்கு!

## எண்மர் மரணம்; 15 பேர் வரை படுகாயம்
## மேலும் சடலங்கள் மீட்பு, வாகனங்கள் சேதம்

(கிளிநொச்சியில் இருந்து சந்திரசேகர்)

கிளிநொச்சியில் நேற்றுப் பகல் முழுவதும் தொடர்ச்சியான விமானத்தாக்குதல் இடம்பெற்றது. இதனால் நகரில் உள்ள கடைகள் பலத்த சேதமடைந்ததுடன், எட்டுப்பேர் வரை பலியாகினர். ஆனையிறவில் இருந்தும் பரந்தனை நோக்கி ஷெல் வீச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டன.

மாலை 3 மணியளவில் கிளிநொச்சிக்கு வந்த பொம்மர்கள் பஸ் நிலைய முன்பாகவும், பொலிஸ் நிலையம் முன்பாகவும் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களைக் குறி வைத்து தாக்கின.

இச்சம்பவத்தில் வாகனத்தில் இருந்தவர்களும், மோட்டார் சைக்கிளில் சென்றவர்களுமாக எட்டுப்பேர் அவ்விடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்தனர்.

—04 ஆம் பக்கம் பார்க்க

## யாழ்வாசிகள் இருவர் காயம்

கிளிநொச்சி டிப்போ சந்தியில் நேற்றுக் காலை இரண்டு பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின.

காலை 9 மணியளவில் நடந்த இத் தாக்குதலின் போது அப் பகுதியிலிருந்த கிறிஸ்தவ தேவாலயம் உட்பட பல கட்டிடங்கள் சேதமடைந்தன.

மண்ணெண்ணை வாங்குவதற்காக கியூவில் நின்ற பொது மக்கள் மீதே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

ப. குமார் (17) இணுவாலை, எஸ். பிரான்சிஸ் (25) சேந்தான்குளம் ஆகியோர் பலத்த காயமடைந்தனர். (70)

## ஜெயந்தி நகரிலும் குண்டு வீச்சு

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஜெயந்தி நகர், கனகபுரம் ஆகிய பகுதிகளில் 2 குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதலை நடாத்தியுள்

—04 ஆம் பக்கம் பார்க்க

# வவுனியாவில் குண்டு வீச்சு நகரில் இராணுவம் தாக்குதல்

வவுனியாவில் நேற்றுக் காலை குண்டுவீச்சு விமானங்கள் கடும் தாக்குதலை மேற்கொண்டன இரணை இலுப்பைக்குளம், மதீனாநகர் ஆகிய பகுதிகளில் நடந்த தாக்குதலில் ஒரு பொதுமகன் பலியானார் இறம்பைக்குளம் வாசியான இரத்தினம் கருணதாஸ் காயமடைந்தார்.

இதேசமயம் நெடுங்கேணிப் பகுதியில் இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதலை நடாத்தின இச்சம்பவத்தில் சிவம் (32), தவம் (27) கனகேந்திரம் (19) மயூரன் (18) ஆகிய நான்கு பொது மக்கள் காயமடைந்தனர். கடை ஒன்றும் சேதமடைந்தது. நேற்றுக் காலை 9 மணியளவில் வவுனியா நகரில்இராணுவத்தினர்பொது மக்கள் மீது கண்டபடி தாக்

—04 ஆம் பக்கம் பார்க்க

## சின்ன மூளாய்க்கு ராணுவம் முன்னேறும் முயற்சி முறியடிப்பு

நேற்று முன்தினம் காலை 10-20 மணியளவில் ஊர்காவற்றுறை இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் சின்ன மூளாய் வைத்தியசாலைப் பக்கமாக முன்னேறி விடுதலைப் புலிகளின் காவல் அரண் மீது தாக்குதலை மேற்கொண்டனர்.

இதனால் எதிர்த்தாக்குதலை விடுதலைப் புலிகள் மேற்கொண்டபோது இராணுவத்தினர் முன்னேற முடியாது பின்வாங்கி முகாம்சென்றனர். (71)

## பி. பி. ஸி. செய்தியாளர் கருத்து
## தவறான தகவல்கள் கொண்டு இராணுவம் மோதல் தொடரின் பின்னடைவே ஏற்படும்

விடுதலைப்புலிகள் குறித்து தமக்கு கிடைத்த சில தகவல்களைக் கொண்டே யுத்த நிறுத்தத்தைக்கைவிட ராணுவம் துணிந்தது எனக்கூறப்படுகிறது. எனினும் கடந்த காலங்களில் புலிகள் குறித்து தவறானதகவல்களே கொழும்புக்கு இடைத்து வந்துள்ளது என பி பி. ஸியின் கொழும்பு செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

கிடைத்த தகவல்கள் தவறானதாக இருந்து தற்போது யுத்தநிறுத்தத்தை கைவிட்டு ராணுவம் தாக்குதலை புலிகளுக்கு எதிராக முனைப்பாக

—04 ஆம் பக்கம் பார்க்க

## மாங்குளம் மகாவித்தியாலயம் மீண்டும் ஆரம்பமானது

மாங்குளம் மகாவித்தியாலயம் மீண்டும் ஏழு மாதங்களின் பின் அதே இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

ஐம்பது வீதமான ஆசிரியர்கள் மாணவர்கள் பாடசாலைக்குச் சமுகமளித்துள்ளனர். விடுதலைப் புலிகளின் ஆதரவுடன் பெற்றோர் ஆசிரியர், மாணவர்கள் பாடசாலை சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். (38)

## பல்கலைக்கழகத் திருட்டு சிலபொருட்கள் மீட்பு!

கடந்த சில நாட்களில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இருந்து காணாமல்போன பொருட்களின் ஒரு பகுதி மீட்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன, இது தொடர்பாக தற்போது விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுவதாகவும், இதில் பல்கலைக்கழக ஊழியர்கள் சிலர் சம்பந்தப்பட்டுள்ளது தெரியவந்துளளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (74)

## தனியார் கல்வி நிறுவனம் முன்வந்தது
## மாவீரர்குடும்ப மாணவர்க்கு இலவசக் கல்வி போதனை

மாவீரர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கு இலவச கல்வி போதனையை வழங்க இருபாலையிலுள்ள கல்வி நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளது.

ஆண்டு ஆறுமுதல் பதினொன்று வரையுள்ள மாணவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் இலவச கல்வி போதனை வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்விப் போதனை பெற விரும்பும் மாவீரர்களின் குடும்ப அங்கத்தவர்கள் தங்கள் பகுதி விடுதலைப்

— 04ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பு செல்பவர்கள் முத்திரைச் சந்தியில் பதியவும்

கொழும்பு செல்லும் பயணிகள் முத்திரைச் சந்தியிலுள்ள போக்கு வரத்துப் பகுதியில் பதிவு செய்து பயணத்தைத் தொடருமாறு போக்குவரத்துப்பகுதியினர்தெரிவித்தனர்.

கடந்த சில நாட்களாக பதிவு செய்யாமல் பயணத்தைத் தொடருவதற்கு பயணிகள் அனுமதிக்கப்பட்டது தெரிந்ததே.

சேவையில் ஈடுபட்டுள்ள பஸ்களின் சுழற்சி முறையை ஒழுங்காக மேற்கொள்ளவும், போக்குவரத்தில் ஈடுபடும்

— 04ஆம் பக்கம் பார்க்க

## மீனவர் மீது கடற்படை சூடு படகு, வலைகள் கடலில் மூழ்கின

புங்குடுதீவு, குறிகாட்டுவான் பகுதிகளில் படகிலிருந்து மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது சிறிய விசைப்படகொன்றில் வந்த கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்த

— 04ஆம் பக்கம் பார்க்க

## யாழ் கூட்டுறவு பயிற்சிக் கல்லூரி 23-ம் திகதி முதல் ஆரம்பமாகிறது

யாழ் மாவட்ட கூட்டுறவுப பயிற்சிக் கல்லூரி இம் மாதம 23-ம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகின்றது.

நாற்பது மாணவர்களைக் கொண்ட கூட்டுறவுத் தராதரப்பத்திர சாதாரண தர பயிற்சி வகுப்புகள் முதலில் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் உயர்தர வகுப்புக்களையும் நடாத்த இக் கல்லூரி நட

— 04 ஆம் பக்கம் பார்க்க

## யாழ் மாவட்டத்திற்கு மாதம் 60 கோடி

மாதமொன்றிற்கு 60 கோடி ரூபா யாழ் மாவட்டத்தின் தேவைக்கு அனுப்பி வைக்க கொழும்பில் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பணம் அடுத்து வரும் கப்பல்களில் அனுப்பிவைக்கப்படவுள்ளதாகசம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தனர். (66)

உ
முருகா

## 31-ம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

### வயித்திலிங்கம் சங்கரப்பிள்ளை

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

14.12.90. அன்று சிவபதமெய்திய எமது குடும்பத் தலைவர் ஸ்ரீமான் வயித்திலிங்கம் சங்கரப்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் சபிண்டீகரணம் எமது இல்லத்தில் 13. 01. 1991 ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணியளவில் நடைபெறும்.

இச் சபிண்டீகரண வைபவத்திலும், இதனையடுத்த மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் அன்புகொண்டு அழைக்கிறோம்.

எம் குடும்பத் தலைவரின் மரணச் சடங்கு வைபவத்திற்கு வருகை தந்த பெருமக்களுக்கும், எமக்கு ஆறுதல் கூறி அனுதாபச் செய்தி அனுப்பி வைத்த அன்பர்கட்கும், வேறு பல்வகையாலும் எமக்கு உதவிய நல்லுள்ளம் படைத்தோர் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
திருமதி தில்லையம்மா சங்கரப்பிள்ளை (மனைவி)
பிள்ளைகள், மருமக்கள்.

'முருக பதி'
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

01102

## 16 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 02 — 01 — 1909



இறப்பு 29 — 12 — 1990

கரவெட்டி கிழக்கு
### உயர்திரு. சின்னத்தம்பி கந்தையா
(இரணவைத்தியர்)

29. 12. 90 இல் அமரத்துவம் அடைந்த அன்னாரின் அந்தியேட்டியும் சபிண்டீகரணமும் இன்று பழமுதிர் சோலை 276, சில்வாவீதி, வடடக்கச்சியில் நடைபெறுகின்றது. அன்னாரின் ஆன்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பேறாமகன்
சி. ம. மு குமாரசுவாமியும்,
குடும்பத்தினரும்.

01099

# கொழும்பில் தமிழ் இளைஞர் கைது

## வெளிநாட்டு ஏஜன்ஸிகளே காரணம் எனத்தகவல்

கொழும்பில் தமிழ் இளைஞர்கள் தங்கும் விடுதிகளில் திடீர் திடீரென பொலிசார் சுற்றி வளைப்புகளை மேற்கொள்வதாகவும் இளைஞர்கள் பலரைக் கைது செய்வதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சென்றவாரம் அதிகமான இளைஞர்கள் கைது செய்யப்பட்டதாகவும், இவர்கள் கைது செய்யப்படுவதற்கு 'ஏஜன்ஸி' கள் பல பொலிஸாருக்கு துணைபோவதாகவும் கூறப்படுகிறது.

வெளிநாடு செல்வதற்காக ஏஜென்சிகளிடம் காசு கட்டிவிட்டு நீண்டகாலமாக அலையும் இளைஞர்கள் தமது வெளிநாட்டுப் பயணத்தை துரிதப்படுத்துமாறு ஏஜென்சிகளை வற்புறுத்துவதாகவும், இவர்களுடைய தொல்லை தாங்காத ஏஜென்சிகள் பொலிஸாருக்கு பணம் கொடுத்து இளைஞர்களைக் கைது செய்ய உதவுவதாகவும் கூறப்படுகிறது.

வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கோட்டைப் பகுதிகளிலுள்ள விடுதிகளிலேயே அதிக இளைஞர்கள் கைது செய்யப்படுகின்றனர்.

கைது செய்யப்படும் இளைஞர்கள் மேலதிக பணம் செலுத்தி விடுதலை அடைவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸார் இரண்டு வழிகளாலும் பணம் சம்பாதிப்பதற்காக இக் கைது நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் கூறப்படுகிறது.

இதே வேளை பல தமிழ்க் குழுக்களும் பொலிஸாருடன் இணைந்து செயற்படுவதாக அறிவிக்கப்படுகிறது. (70)

## தமிழீழமீட்பு நிதி மீளளிப்பு
### 100 அதிர்ஷ்டசாலிகள் விபரம் அறிவிப்பு

தமிழீ மீட்பு நிதிக்கு பங்களித்த கடன் பத்திரதாரர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நூறு கடன் பத்திரதாரர்களுக்கான கடன் மீளளிப்பு 14 ஆம் திகதி நல்லூர் மங்கையற்கரசி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக தமிழீழ விடுதலைப்புலிகளின் நிதிப் பொறுப்பாளர் செ. தமிழேந்தி அறிவித்துள்ளார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் பத்திரதாரர் ஒவ்வொருவரும் தத்தமது கடன்பத்திரத்தையும் அடையாள ஆவணம் ஏதாவது ஒன்றையும் கடன் மீளளிப்பு தொடர்பாக அனுப்பப்பட்ட கடிதத்தையும் சமர்ப்பித்து அவர்களுக்குரிய தங்க நாணயத்தைப்பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் பத்திரதாரரின் விபரம் வருமாறு:-

கோப்பாய் உ. அ. பிரிவு

தொடர்பு இலக்கம்; கடன் பத்திர இலக்கம்; யா/கோ/32 - 32, யா/கோ/44 - 44 யா/கோ 71 - 71, யா/கோ/174 - 1174, யா/கோ/196 - 1196, யா/கோ/315 -1315, யா/கோ/273 - 1273, யா/கோ/1203-8204, யா/கோ/1262- 8263, யா/கோ/1530-8537, யா/கோ/1753 - 8754, யா/கோ/2256-9257, யா/கோ/2439 - 9440, யா/கோ/3158-14159, யா/கோ/4338-15339, யா/கோ/4923-15924, யா/கோ/5172-16173 யா/கோ/5531-

—04 ஆம் பக்கம் பார்க்க

யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்
இலங்கை

### அறிவித்தல்

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் கிளிநொச்சியில் அமைந்துள்ள விவசாய பீடத்தில் குடிசார் எந்திரவியல் (புதிய/இருத்த) வேலைகளைச் செய்ய விரும்பும் தனியார் / கூட்டுறவு / கிராம அபிவிருத்திச் சங்க ஒப்பந்தகாரர்கள் 15-01-1991 16-01-1991 வரை திருநெல்வேலி வளாகத்தில் அல்லது 22-01-1991—23 - 01 – 1991 வரை கிளிநொச்சியில் அமைந்துள்ள விவசாயபீட அலுவலகத்தில் வேலை நேரங்களில் பல்கலைக்கழக வேலைகள் எயந்திர வியலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

தனியார் ஒப்பந்தகாரர்கள் ICTAD அல்லது ஏதாவது அரச நிறுவனத்தில் பதிவு செய்து இருப்பதோடு பின்வருவனவற்றையும் சமர்ப்பிக்க வேண்டும்.

1) கிளிநொச்சி மாவட்டத்தில் ஏதாவது அரச நிறுவனமொன்றில் ரூபா 100,000/-க்கு குறையாத குடிசார் ஒப்பந்த வேலையை பூர்த்தி செய்த ஆவணத்தின் பிரதி,

2) கிளிநொச்சி மாவட்டத்தில் ஒப்பந்தகாரரின் தலைமை அலுவலகம் அல்லது கிளை அலுவலகம் அமைந்திருப்பதை உறுதிப்படுத்தும் ஆவணத்தின் பிரதி.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.
திருநெல்வேலி.

01104


## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

சோமசுந்தரம் பிள்ளை இரத்தினசபாபதி. இலிகிதர். அடையாள அட்டை இல. 350520910 V சாவகச்சேரிச் சந்தையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவு கூர்ந்து சாவகச்சேரி, மம்மி டி புடைவைக் கடையில் ஒப்படைக்கவும்.

01108

### புத்தகம்

வர்த்தகமும் நிதியும் (1) (உயர்தர வகுப்புக்குரியது) உள்நாட்டு வியாபாரம், வெளிநாட்டு வியாபாரம், உற்பத்தி வர்த்தகத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள், சந்தைப்படுத்துதல் A/L வர்த்தக மாணவர்களின் உதவி நூல். தொகுப்பு: தேவராஜன் ஜெயராமன் B. Com Hons M. B. A (Delhi) விலை ரூபா 48/- வெளியீடு - விற்பனை பூபாலசிங்கம் புத்தக சாலை, யாழ்ப்பாணம்.

01064

மாணவர், ஆசிரியர் அனைவருக்கும்
இனிய பொங்கல் வாழ்த்துக்கள்

BITSMAN Institutes
Manipay
92 A/L பிரிவு (2)
கலை, வர்த்தக வகுப்புக்கள்

வர்த்தகம்: திரு. தேவா
பொருளியல்: திரு உதயன்
தமிழ், இந்துநாகரிகம்: திரு. பாலா
கணக்கியல்: திரு. இராஜன்
அளவையியல்: திரு. S. S. மனோகரன்
புவியியல்: திரு. சண்

ஆரம்பம்: 14-01-91 3.00 P. m.
(விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன)

01095

மாணவர், ஆசிரியர் அனைவருக்கும் எமது
பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்

BITSMAN Institutes
MANIPAY.
A/L 92 பிரிவு (2)
கணித, விஞ்ஞான வகுப்புக்கள்.

பௌதிகவியல் — திரு. சௌந்தி
தூய, பிரயோக கணிதம் — திரு. கமலசிங்கம்
இரசாயனம் — திரு. மணியம்
விலங்கியல் — திரு. தங்கராஜா
தாவரவியல் — திரு. நேசன்

ஆரம்பம் 14-1-91 திங்கள் 3-30 p. m.
விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

01096

# இந்தியா - ரஷ்ய உறவில் விரிசல்!
## வுடன் உறவினை பேண அமெ. முயற்சி

இந்தியா மீது அமெரிக்கா கொண்டிருந்த இராணுவரீதியான நிலைப்பாட்டில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதாக இந்திய இராணுவ அதிகாரிகள் கருதுகின்றார்கள்.

அண்மையில் அமெரிக்க இராணுவ ஆலோசகர்கள் தீட்டிய புதிய சர்வதேச இராணுவ நிலைப்பாட்டுத் திட்டத்தில் இந்தியாவுடன் சுமுகமான உறவினைப் பேண அமெரிக்கா முயற்சிகள் மேற்கொள்ள புதிய திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுகின்றது.

எந்தெந்த விடயங்களில் இந்தியாவுடன் நட்புறவு பேணப்படும் என்பது இரகஸியமாகவேயுள்ளது. இதுபற்றிய விபரங்களை உளவறிய இந்திய உளவாளிகளால் முடியவில்லை எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

சோவியத்யூனியன் இந்தியாவின் மீது கொண்டிருந்த பற்று அண்மைக் காலங்களில் குறைவடைந்து செல்வதினாலேயே அந்த இடத்தை அமெரிக்கா நிரப்ப முயற்சிப்பதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

## இரும்புப் பெண்மணியைக் கவிழ்த்தவர் சிறப்பு மனிதராகத் தேர்வானார்

1990 இன் சிறப்பு மனிதர் கணிப்பில் பிரித்தானிய சுற்றாடல்த் துறை அமைச்சர் மைக்கல் ஹசற்றைன் வெற்றிபெற்றுள்ளார்.

பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் (பி. பி ஸி.) நடாத்தப்பட்ட இக்கணிப்பில் இரும்புப் பெண்மணி திருமதி தட்சரின் ஆட்சியைக் கவிழ்க்க முக்கிய காரணமான இவருக்கு மேற்படி சிறப்பு மனிதர் பட்டம் கிடைத்தது.

இக்கணிப்பில் இந்திய பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் எல். கே. அத்வாணி, மைக்கலிலும் அதிகமான வாசகர் வாக்குகளைப் பெற்றிருந்த போதிலும் அத்வாணியின் ஆதரவாளர்கள் அவருக்காகப் பிரசாரம் செய்து வாசகர் வாக்குகளில் மோசடி செய்தார்கள் என்பதால் அத்வாணி மேற்படி போட்டியில் இருந்து விலக்கப்பட்டார்.

## காசோலைகள் உங்களுடையதா?

யாழ் பிரதான வீதி மக்கள் வங்கிக்குரிய வீ. கந்தையா என்பவரின் இரு காசோலைகள் யாழ் போதனா வைத்தியசாலை ஊழியர் மகேஸ்வரனினால் கண்டெடுக்கப்பட்டு முரசொலி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் அலுவலக நேரத்தில் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

## உரக்கூட்டுத்தாபன அலுவலகம் இடமாற்றம்

இலங்கை உரக் கூட்டுத்தாபன யாழ், கிளிநொச்சி மாவட்ட அலுவலகங்கள் கடந்த வாரம் தொடக்கம் யாழ் மாவட்டக் கமநல சேவைகள் திணைக்கள - நல்லூர் அலுவலகத்தில் செயற்பட்டு வருவதாக உரக் கூட்டுத்தாபனத்தின் வட பிராந்திய சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் ஜீ. சிதம்பரநாதன் அறிவித்துள்ளார்.

## அதிபர் தரம் III நேர்முகப் பரீட்சையை இங்கு நடாத்தப் பணிப்பாளர் கோரிக்கை

ஆசிரியர்களைத் தரம் மூன்று அதிபர்களாகப் பதவி உயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சையை யாழ் மாவட்டத்தில் நடாத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டு வருவதாக யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்களைத் தரம் மூன்று அதிபர்களாகப் பதவியுயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை கடந்த மே மாதம் 13 ஆம் திகதி நடைபெற்றது.

இப பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் 150 க்கும் மேற்பட்டோர் நேர்முகப் பரீட்சைக்காகக் கொழும்பிற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

அழைப்புக் கடிதங்கள் இங்கு பிந்திக் கிடைத்தமையினாலும், போக்குவரத்துத் தொடர்புகள் துண்டிப்புக் காரணமாகவும் யாழ், கிளிநொசசி மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் குறித்த திகதியில் நேர்முகப் பரீட்சைக்குக் கொழும்பிற்குச் செலல முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

இதனைக் கருத்தில் கொண்டு தற்போது இவர்களுக்கான நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடாத்த நடவடிக்கையெடுக்குமாறு கல்விப் பணிப்பாளர் கல்விச் சேவை ஆணைக் குழுவைத் தற்போது கோரியுளளார். (74)

## ஓய்வூதியம் ஒழுங்காகக் கிடைக்கும்வரை உணவு நிவாரணம் வழங்கக் கோரிக்கை

வட பகுதியைச் சேர்ந்த ஓய்வூதியக்காரர்களுக்கு இலவச உலர் உணவு விநியோகம் தொடர்ந்தும் கிடைக்க நடவடிக்கையெடுக்குமாறு நலலூர்த் தொகுதி ஓய்வூதியர் நலன்புரிச்சங்கம் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கோரியுள்ளது.

வடபகுதி ஓய்வூதியக்காரர்களுக்கு கடந்த பலமாத காலமாக அவர்களது மாதாந்தர ஓய்வூதியங்கள் வழங்கப்படவில்லை.

அத்துடன் நிதி நிலைமை பாதுககப்பட்டுள்ளதினால் வங்கிகள் உரிய காலத்தில் ஓய்வூதியத்தை முழுமையாக ஓய்வூதியகாரர்களுக்கு வழஙக முடியாத நிலையிலுளளன.

இதனால் மாதாமாதம் அவர்களுக்குரிய ஓய்வூதியம் முன்னரைப்போல் முழுமையாகக் கிடைக்கும் சூழ்நிலை ஏற்படும் வரை உலர் உணவு விநியோகத்தை தொடர்ந்து வழங்க வேண்டும் என கோரிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

## தைப்பொங்கல் கதம்ப நிகழ்ச்சி

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகததின் தமிழ் மன்றத்தினர் தைப்பொங்கல் தினத்தன்று கதம்பநிகழ்ச்சி ஒன்றினை நடாத்த உள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் கவியரங்கு, நாட்டார் இசை அரங்கு, வில்லிசை முதலான நிகழ்ச்சிகள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுளளது:



விடுதலைப் புலிகளால் காவலில் வைக்கப்பட்டிருக்கும் 43 சிங்களப் பொலிஸாரைப் படத்தில் காண்கிறீர்கள். இடதுபக்க மூலையில் மக்கள் முன்னணி செயலர் யோகியும் காணப்படுகிறார்.

தமிழக அரசியல்

## தமிழ்நாட்டு அரசியல் தலைவிதி

எம். ஜி. ஆர். பத்து வருட அரசியலின் மற்றொரு விளைவு திராவிட இயக்கத்தின் நீண்டகாலச் சமூகப் பணிகளின் பலனாகவும் மாநிலஉணர்வின் வடிகாலாகவும 1967க்குப்பின்தமிழ் நாட்டில் அனைத்திந்தியக்கட்சி எதுவும்வேரூன்ற முடியாதவாறிருந்த நிலையை நெகிழவைத்தமை, எம் ஜி. ஆர். ஆட்சிக்காலத்திலேதான் மீண்டும் காங்கிரஸ் தமிழ் நாட்டில் உயிர் பெற்றது. இக்கால கட்டத்திலேதான் பெரியார் கொள்கைக்கெதிரான பக்தி அமைப்புகள் - பங்காரு அடிகள் முதல் விஸ்வ இந்து பரிஷத்வரை தமிழ்நாட்டில் பரவ முடிந்தது.

இந்தக்கட்டத்தில்தான் அதனைத் தன் மாநில சுயாட்சி இலட்சியங்களுக்கு ஏற்ற விதத்தில் திருப்பிவிட முடியுமா என்று கருணாநிதி முயற்சித்ததைக் கடந்த இரண்டாண்டுகளாகப்பார்க்கிறோம்.

ஆனால் அடுத்த பத்தாண்டுகளின் தமிழக அரசியல் எப்படிப்பட்டதாக இருக்கும் என்று கணிக்கின்றபோதுதான் பல சிக்கல்கள் தெரிகின்றன. அதில் ஒன்று ஈழப்பிரச்சினை.

ஈழப் பிரச்சினை தீராமல் தொடர்வது தமிழக இளைஞர்களிடையே நீண்ட காலப் பாதிப்பை நிச்சயமாக ஏற்படுத்தும் எல்லைக் காவற்படை தமிழகத்திற்கு வரப்போவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது இந்தியாவில் வட கிழக்கு மாநிலங்களுக்கேற் பட்ட அநுபவங்களைக் கொண்டு பார்க்கும்போது வநத இராணுவம் திரும்பியதாக இல்லை. கிராமப் பகுதிகளில் இராணுவம் தொடர்ந்து இருப்பது பல உரசல்களையும், விரிசல்களையும் ஏற்படுத்தும். இதன் பாதிப்பு அடுத்த பத்தாண்டுகளில் முக்கியமாகிவிடும் இந்தச் சூழ்நிலையில் இளைஞர்களை வழி நடத்தத் திறமையான அரசியற் பார்வை தேவை.

ராஜீவ் காந்தியும் காங்கிரஸும் ஏற்றுக்கொண்டுள்ள வலிவுள்ள மத்திய அரசு என்ற அணுகுமுறை அனைத்திந்திய அளவில் பஞ்சாபிலும், அஸாமிலும், காஷ்மீரிலும் பயன்தரவில்லை. வி. பி. சிங்கின் இந்திய கூட்டாட்சிக் கொள்கை வலுப்பெறுமுன்பே ஆட்சி கவிழ்ந்து விட்டது.

இப்படிப்பட்ட நிலையில் தமிழக அரசியலின் எதிர்காலப்போக்கு மத்திய அரசியலில் ஏற்படப்போகும் நிகழ்வுகளை ஒட்டியே அமையும்.

மத்தியிலே ராஜீவ் காந்தியோ, வி. பி சிங்கோ அத்வானியோ யார் ஆட்சிக்கு வந்தாலும் சரி, கூட்டாட்சிமுறை வலுப்படாமல் போனால் தமிழகத்தில் இளைஞர்கள் ஈழத்தின் முன்னுதாரணத்தைப் பின்பற்றிவிடக் கூடிய வாய்ப்பு அடுத்த பத்தாண்டுகளில் பலமாகவே இருக்கிறது.

அந்த நிலையில் கலைஞரும் ஜெயலலிதாவும் எத்தகைய போக்கை மேற்கொள்ளுவார்கள் என்பதைப் பொறுத்தே அவர்களுடைய எதிர்காலம் நிச்சயிக்கப்படும்.

ஞாநி. நன்றி: ஆனந்தவிகடன்

## 'புலிகள் இல்லை என்று சொன்னதில்லை'

- கருணாநிதி

சில வாரங்களுக்கு மூன் கருணாநிதி 'இந்தியா ருடேக்கு' ஒரு சுருக்கமான பேட்டி அளித்தார். அதிலிருந்து.

நன்றி - இந்தியா ருடே

தமிழகத்தில் புலிகளின் நடவடிக்கைகள் பற்றிய அரசின் நிலையில் மாற்றம் ஏற்பட்டிருப்பது பற்றி......?

முதல்வர்: புலிகளின் நடவடிக்கை குறித்த என்னுடைய கருத்தில் எந்தவித மாற்றமும் இல்லை. 1983 இல் இருந்தே பல்வேறு இலங்கைத் தமிழ்க் குழுக்கள் தமிழகத்தில் இருந்து வருகின்றன நீண்ட நாட்களாகவே இங்கே இருக்கிறார்கள் புலிகளின் முகாம் இங்கே கிடையாது என்று சொல்லி வந்திருக்கிறேன். புலிப்படையினர் இங்கே இல்லை என்று நான் எப்போதுமே சொன்னதில்லை. புலிப்படையினர் இங்கே இருப்பதால் சட்டம்-ஒழுங்கிற்கு ஊறு நேரவில்லை என்று இப்போதும் கூடச் சொல்கிறேன்.

எம் ஜி ஆர் ஆட்சியின் போது அவர் புலிகளை ஆதரித்தும் கூட யாருமே அவரை நீக்கக் கோரவில்லை என்ற நிலையோடு இப்போதுள்ள நிலையை ஒப்பிட்டுப் பார்ப்பது பற்றி......?

முதல்வர்: எம் ஜி ஆர் புலிகளை ஆதரித்தார் என்பது உண்மைதான்; ஆனால் புலிகளை ஆதரித்ததில் ராஜீவ் அவருக்கு ஆதரவாக இருந்தார் என்பது முக்கியமானது. இப்போது புலிகள் பிரச்சினை என்னுடைய அரசுக்கு எதிராகப் பத்திரிகைகள் கிளப்பி விட்ட பூச்சாண்டி

ஈழம் பற்றி.....?

முதல்வர்: அது இலங்கை அரசாங்கத்திற்குரிய பிரச்சனை வெளியிலிருந்து கொண்டு நாம் முடிவெடுக்க முடியாது.

குறிப்பு: சட்டம் ஒழுங்குகளுக்குப் புலிகள் ஊறுவிளைவிக்கவில்லை எனில் காயப்பட்டு ஊனமுற்ற போராளிகளை ஏன் கைது செய்தார்? இவை கருணாநிதி அவர்களுடைய பதவிக்கு வந்த சோதனையால் சில நியாயபடுத்தும் சந்தர்ப்பவாதப் பதில்கள்.

# உலக அரங்கில்

## வளைகுடாப் போர்? இன்னமும் 3 நாட்கள்!

வளைகுடாப் போரை தீர்மானிக்கும் கடைசி முயற்சியாக ஐ. நா. செயலர் பெரஸ்டி குயிலர் ஈராக் சென்றுள்ளார். தனது ஈராக் ஜனாதிபதி ஹுசையினுடனான சந்திப்பின் போது இவர் ஐந்து அம்சக் கோரிக்கை ஒன்றை ஐரோப்பிய நாடுகளின் சார்பில் வழங்குவார்.

ஜனவரி 15 இற்கு முன்னர் ஈராக் குவைத்தை விட்டு வெளியேற வேண்டும் குவைத்தை எதிர்காலத்திலும் ஆக்கிரமிப்பதில்லை என உறுதியை ஈராக் தரவேண்டும்; சதாம் ஹுசையினின் கோரிக்கைப்படியே பலஸ்தீனிய பிரச்சினைக்கான சர்வதேச மாநாடு கூட்டப்படும்; ஈராக்கின் வாபஸ் உடன் சர்வதேச படைகளும் வாபஸ் பெறப்படும். ஆகிய கோரிக்கைகள் ஈராக் ஜனாதிபதிக்கு பெரஸ்டி குயிலர் மூலம் வழங்கப்படும்.

கிறீன்விச் நேரப்படி (GMT) ஜனவரி 15-ம் திகதி நள்ளிரவு அதாவது இலங்கை நேரப்படி அன்று காலை 10 30 மணியுடன் ஐ. நாவின் காலக்கெடு முடிகிறது. இதனால் தமது பிரஜைகளை மத்திய கிழக்கு நாடுகளான சிரியா, யேமன், இஸ்ரேல் போன்றவற்றில் இருந்து வெளியேறுமாறு ஐரோப்பிய நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன. இதனிடையே சமரஸ முயற்சிக்கு புதிய திட்டம் ஒன்றை ரஷ்ய ஜனாதிபதி கொர்பச்சேவ் நேற்று தமக்கு தொலைபேசி மூலம் தெரிவித்ததாக அமெரிக்க ஜனாதிபதி புஷ் கூறினார் புதிய திட்டம் குறித்து அவர் விளக்கம் தரவில்லை.

# யுத்த நிறுத்தம் மீறியதில் ஏற்படும் விளைவுக்கு அரசே பொறுப்பு

''தமிழீழத்தில் ஒரு நிரந்தர சமாதானம் ஏற்பட்டு எமது மக்கள் சுதந்திரமாகவும், கௌரவமாகவும் பாதுகாப்பாகவும் வாழவேண்டும் என்பதற்காகவே நாம் போராடி வருகிறோம். ஆனால் எமது தூய்மையான லட்சியத்தை தவறாக மதிப்பிட்டு எம்மை அழிக்கும் நோக்குடன் சிங்கள அரசு யுத்தத்தைத் தொடர முடிவு எடுத்துள்ளது இதனால் ஏற்படும் சகல விளைவுகளுக்கும் அரசுதான் பொறுப்பேற்க வேண்டும்''

அரசாங்கம் யுத்த நிறுத்தத்தை நீடிப்பதில்லை என எடுத்த முடிவு பற்றி விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி நேற்றிரவு விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

''சமாதான வழியில் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் ஸ்ரீலங்கா அரசுக்கு எவ்வித அக்கறையும் இல்லை என்பதை இந்த முடிவு தெட்டத்தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. இனவாத அரசியலில் இருந்தும் இராணுவ அடக்கு முறைப்பாதையில் இருந்தும் சிங்கள ஆளும் வர்க்கம் ஒரு பொழுதும் விலகப்போவதில்லை என்பதை இந்த முடிவு உலகுக்கு உணர்த்துகிறது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (71)

## அப்பியாசக் கொப்பிகளை இங்கு எடுத்து வர ஏற்பாடு

யாழ் மாவட்ட பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான அப்பியாசக் கொப்பிகளை இங்கு தருவிக்க யாழ் அரசாங்க அதிபர் கொழும்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சு நடாத்தியுள்ளார்.

இதனையடுத்து இவற்றை கப்பலில் கொண்டுவர ஏற்பாடுகள் செய்யப்படுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே போல தேவையான பேனை, பென்சில் உட்பட பாடசாலை உபகரணங்களும் விரைவில் இங்கு கொண்டு வரப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது. (66)

## கிழக்கு மாணவர்களுக்கு உதவ

## துணைவேந்தர் நிதிக்கு பண உதவி கோரப்படுகிறது

யாழ்பல்கலைக்கழக துணைவேந்தர் நிதிக்கு உதவுமாறு பல்கலைக்கழக துணைவேந்தர் அ. துரைராஜா பல்கலைக்கழக பழைய மாணவர்களையும் அமைப்புகளையும், வெளிநாடுகளில் உள்ள நலன் விரும்பிகளையும் கேட்டுள்ளார்.

யாழ் பல்கலைக்கழகத்தில் உள்ள சுமார் 200 தென்தமிழீழ மாணவர்களுக்கு அதிகளவான உதவிகள் செய்யவேண்டியுள்ளதாகவும், துணைவேந்தர் நிதிக்கு அதிகளவில் பணம் வழங்கப்பட்டால் அவற்றை அவர்களுக்கு பகிர்ந்து வழங்கமுடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த மாணவரின் கஷ்ட நிலையை புரிந்து கொண்டு அவர்களுக்கு உதவி செய்ய அனைவரும் முன்வர வேண்டும் எனவும் துணைவேந்தர் குறிப்பிட்டுள்ளார். (74)

## வீரமரணம்

நேற்று பிற்பகல் 5 45மணியளவில் பலாலி இராணுவத்தினர் நடாத்திய தாக்குதலில் மதனி (மட்டக்களப்பு) வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (71)

## கூட்டுறவுத்துறையில் உள்ளவர்களுக்கு 60 வயதுக்குப்பின்னர் இடமில்லை

கூட்டுறவுச் சங்கங்களில் அறுபது வயதைத் தாண்டிய எவரையும் பணியாளர்களாக வேலைக்கு வைத்திருக்கக் கூடாது என கூட்டுறவுத் திணைக்களம் சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளது.

ஒப்பந்த அடிப்படையில் விசேட அவசிய தேவைகருதி எவரையேனும் சேவையில் வைத்திருக்க வேண்டும் என கூட்டுறவுச் சங்கம் கருதினால் அப்படியானவர்களின் விபரங்களுடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் அனுமதியைப் பெறவேண்டும் எனவும் சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (66)

## 20 லொறிகளில் உணவுப்பொருள் கிளிநொச்சிக்கு வந்துள்ளன

கிளிநொச்சி மாவட்டத்துக்கென இருபது லொறிகளில் உணவுப்பொருள்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் கொழும்பு சென்றபோது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நடாத்திய பேச்சுக்களையடுத்து இவ்வாறு இவை வந்துள்ளன.

இவற்றை விட மேலும் சில லொறிகள் மூலம் உணவும், மற்றும் அத்தியாவசியப் பொருட்களும் இங்கு வரவுள்ளன. (66)

## எரிபொருளில் கலப்படம் புலிகள் நடவடிக்கை

மண்ணெண்ணெ, பெற்றோல் என்பவற்றில் கலப்படம் செய்து விற்பனை செய்தவர்கள் மானிப்பாயில் வைத்து விடுதலைப் புலிகளால் பிடிக்கப்பட்டனர்.

இவர்களிடம் இருந்த எரிபொருளும், பரல்களும் வாகனங்களில் ஏற்றப்பட்டு முகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்டன. (37)

## பொதுசன மாதாந்த உதவிப் பணம் வழங்க நடவடிக்கை

கரவெட்டி, கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளுக்குரிய பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கான ஒக்டோபர் மாதத்துக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்குரிய பணம் யாழ் அரசாங்க செயலகத்தின் மூலம் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர்களிடமும் கையளிக்கப்பட்டுள்ளது

ஒவ்வொரு உதவி அரச அதிபர் அலுவலகங்களிலும் அல்லது உதவி அரச அதிபர் அவர்களால் குறித்துரைக்கப்படும் இடங்களிலும் இப்பணங்கள் வழங்கப்படவிருக்கின்றன. (47)

## தமிழீழ மீட்பு நிதி ...

16532, யா/கோ/ 5598-16599, யா/கோ/ 6281-18282.

நல்லூர் உ. அ. அ. பிரிவு தொடர்பு இலக்கம்; கடன் பத்திர இலக்கம்;

யா/ந/ 07-3007, யா/ந/ 14-3014, யா/ந/73-3073, யா/ந/ 191 3191, யா/ந/ 369-3369 யா/ந/465-3465 யா/ந/511-6511, யா/ந/515 - 3515, யா/ந/ 552 - 3552, யா/ந/ 355-3655, யா/ந/823-3823, யா/ந/ 845, 3845 யா/ந/ 873-3873, யா/ந/895-3895, யா/ந/ 1047-10047, யா/ந/ 1340 - 10340, யா/ந/ 2115 11115, யா/ந/ 3015-12015, யா/ந/ 4211-13211, யா/ந/ 4548-13548, யா/ந/ 4620-13620, யா/ந/ 5156-19656.

பருத்தித்துறை உ. அ. அ. பிரிவு தொடர்பு இலக்கம் ; கடன் பத்திர இலக்கம்;

யா/பரு/20-20012, யா/பரு/ 29-20021, யா/பரு/31-20023 யா/பரு/51 -20043, யா/பரு 135 - 20135, யா/பரு/610-20610, யா/பரு/628-20628, யா/பரு 825-20825, யா/பரு 827 - 20827, யா/பரு/844 - 20844, யா/பரு/905-20905, யா/பரு/1170 - 21170, யா/பரு/1386 - 21386, யா/பரு 3368 -30368, யா/பரு/3529 30529. யா/பரு/3585-30585.

மானிப்பாய் உ. அ. அ. பிரிவு தொடர்பு இலக்கம்; கடன் பத்திர இலக்கம்;

யா/மா/58 - 158, யா/மா/ 102 - 202, யா/மா 207 - 307, யா/மா 257 - 357, யா/மா/ 269 - 369, யா/மா/ 354 - 454, யா/மா/ 416 - 516, யா/மா/ 554 -654, யா/மா/ 750 - 850, யா/மா/ 751 - 851, யா/மா/ 756 - 856. யா/மா 970 - 1070, யா/மா/ 1582 - 6582, யா/மா/1720 - 6720, யா/மா/3238- 18738.

சங்கானை உ. அ. அ. பிரிவு தொடர்பு இலக்கம்; கடன், பத்திர இலக்கம்;

யா/ச/ 12 27012, யா/ச/ 26 - 27026, யா/ச 74 - 27074, யா/ச/ 97 - 27097, யா/ச/ 108 - 27108, யா/ச/ 476 - 27476, யா/ச/ 731 - 27731, யா/ச/ 791 - 27791, யா/ச/ 1395 - 28395, யா/ச 2385 - 29385, யா/ச/2541 - 29541.

உடுவில் உ. அ. அ பிரிவு தொடர்பு இலக்கம்; கடன் பத்திர இலக்கம்;

யா/உ/ 362 - 2363, யா/உ/ 639 - 2640, யா/உ/ 650 - 2651, யா/உ/ 1323 - 4324, யா/உ/ 1573 - 4574, யா/உ/ 2089 - 5090. யா/உ/ 2974 - 5975, யா/உ/3023 26024, யா/உ/ 3125 - 26126, யா/உ/ 3171 - 26172.

வெளியகழ்வு தொடர்பு இலக்கம்; கடன் பத்திர இலக்கம்;

யா/வெ/20-17020 யா/வெ 185 - 17185, யா/வெ/ 504 - 17504, யா/வெ/ 645-17645' ய/வெ/662 -17662, யா/வெ/ 727 - 17727, யா/வெ/ 771-17771.

### கொழும்பு ..

பயணிகளின் தொகையைக் கணிப்பிடவே மேற்படி நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (70)

### யாழ் ..

வடிக்கை எடுத்துள்ளதாக யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. எஸ். சிவமகாராஜா தெரிவித்தார்.

கூட்டுறவுப் பயிற்சி சாதாரண தரா தரப்பத்திரம் அரசாங்க கணக்குப்பதிவாளர் சேவைக்கு ஒரு விசேட தராதரமாகக் கணிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (66)

### கிளிநொச்சி...

பஸ் நிலையத்தில் உள்ள பதினைந்து கடைகள் வரை பலத்த சேதமடைந்தன இடிபாடுகளுக்கு இடையிலிருந்து இச்செய்தி அச்சுக்குப்போகும் வரை ஒரு சடலம் மீட்கப்பட்டது.

ச. சாந்தினி (5) கண்டாவளை, எஸ். ஜெயராணி, வ தியாகராசா (32) குமுழமுனை, சு ஜெயந்திரன் (32) பன்குளம், கு தேவேஸ்வரன் (26 கிண்ணியா, எஸ் இந்திரகுமார், பபா (லொறிக் கிளீனர்) ஆகியோரே பலியானவர்களாவர்.

காயமடைந்தவர்கள் விபரம்: ம. திருச்செல்வம், எஸ். நாதன், வை. கணபதி, க. சசிகுமார், ப. பத்மநாதன், இ. பிரசாத், சு. மதிஞானம், க ஜெயக்குமார், பி அன்ரன் அலோசியஸ், க. தம்பிராசா, எஸ். பிரபாகரன் வை. ஆனந்தரத்தினம், இ. சண்முகராசா, கு. பொன்னம்மா.

புகையிலை ஏற்றிவந்த வாகனம், தனியார் பஸ் என்பனவும், நான்கு மோட்டர் சைகிள்களும், சுமார் நாற்பது சைக்கிள்களும் பலத்த சேதமடைந்துள்ளன.

பிரபல பாடகர் சாந்தன் இச்சம்பவத்தில் மயிரிழையில் உயிர் தப்பியமை குறிப்பிடத்தக்கது. (35)

### மாவீரர் ...

புலிகள் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர்களின் சிபார்சுக் கடிதத்துடன் விண்ணப்பிக்கலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஜெயந்தி...

ளன.

நேற்றுக் காலை 8.30 மணிக்கு நடாத்தப்பட்ட இத் தாக்குதலில் கனகபுரத்தில் 1 வீடு முற்றாகச் சேதமடைந்தது. பராசக்தி என்பவர் காயமடைந்தார் ஜெயந்தி நகரில் திருமதி நடராசா காயமடைந்தார். அத்துடன் அவரது வீடும் சேதமடைந்தது (71)

### வவுனியாவில்...

குதல் நடத்தினர்.

திடீரென நடைபெற்ற இத்தாக்குதலினால் வவுனியா நகர் சிறிது நேரம் பதற்றமாகக் காணப்பட்டது. ராணுவம் நடத்திய தாக்குதலில் மல்லாவியைச் சேர்ந்த சி. வேலுப்பிள்ளை கிளிநொச்சியைச் சேர்ந்த நடராஜா, பரமுரத்தினம் ஆகியோர் காயமடைந்தனர். (71)

## வி. சி. சுக்லா ராஜினாமா கடிதம்

இந்திய வெளிவிவகார அமைச்சர் வி. சி. சுக்லா ராஜினாமா கடிதத்தை பிரதமர் சந்திரசேகரிடம் சமர்ப்பித்துள்ளார். எனினும் இவரது ராஜினாமா பிரதமரால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

சுக்லா கட்சித்தாவல் தடைச் சட்டத்தினால் நேற்று முன்தினம் தனது எம். பி. பதவியை இழந்தமை குறிப்பிடத்தக்கது.

### மீனவர்...

தாகத் தெரிவிக்கப்படுகின்றது கடலில் பாய்ந்து நீந்தி இந்த மீனவர்கள் உயிர் தப்பினர்.

இவர்கள் பிடித்த மீன்களும், படகும் இத்தாக்குதலில் கடலில் மூழ்கடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (20)

### தவறான ..

ஆரம்பிப்பின் இராணுவம் பின்னடைவுகளை எதிர்நோக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி, 'லக்ஷ்மிபில்டிங்கில்' உள்ள அச்சகத்தில் 13-01-1991இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.